ஆண்டு பட்டிகை வழக்கு எண்.100/2023

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

Case No CC.No. 100/2023 LW- 2 PW- 2

| | | |
|---|---|---|
| Name | : | ஜெயச்சந்திரன் (காயம்பட்ட சாட்சி) |
| Father's/Husband's Name | : | குருசாமி |
| Village | : | பண்ணியாமலை |
| Taluk | : | நத்தம் |
| District | : | திண்டுக்கல் |
| Age | : | 26/2024 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 01st day of October 2024

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் 11.40 A.M. - 12:46 P.M.

( 1 முதல் 8 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். )

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து விவசாய வேலை செய்து வருகிறேன் . அ.சா.1 என் மாமா. ஆஜர் எதிரிகளை தெரியும் . கடந்த 06.05.2020 ம் தேதி ஸ்ரீதர் மற்றும் அண்ணாமலை ஆகியோர் எங்கள் ஊர் மந்தையில் நின்று கொண்டு அசிங்கமாக பேசி கலாட்டா செய்து கொண்டிருந்தார்கள். அதை நான் என்னுடைய மொபைல் போனில் வீடியோ எடுத்தேன் . அதை தெரிந்து கொண்ட எதிரிகள் அதை மனதில் வைத்துக் கொண்டு அதற்கு அடுத்த நாளான 07.05.2020 ம் தேதி இரவு சுமார் 10.00 மணியளவில் நானும், என் அப்பா குருசாமியும் எங்கள் ஊரில் உள்ள எங்களது தோட்டத்திற்கு எனது இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது ,

பிரேம் என்பவர் எங்களை வழிமறித்து கட்டையை வைத்து என்னை தலையில் அடித்து காயப்படுத்தியதில், எனது சட்டை முழுவதும் ரத்தமானது.

2. சுரேஷ் என்பவர் கையால் எனது வலது காதில் அடித்தார். ஸ்ரீதர் என்பவரும் மேற்படி இருவருடன் சேர்ந்து எங்களை வழிமறித்து பைக்கை கீழே தள்ளிவிட்டனர். பின்னர் மூவரும் சேர்ந்து எங்களை பிரேம் கட்டையாலும், மற்ற இருவரும் கையாலும் சரமாரியாக அடித்தார்கள். என் அப்பா அவர்களை விலக்கிவிட முயற்சி செய்தும் அவரால் முடியவில்லை. நான் பைக்கிலிருந்து கீழே விழுந்த நான் பைக்கையும், எனது மொபைல் போனையும் அங்கேயே போட்டுவிட்டு எழுந்து என் மாமா ராஜா (அ.சா.1)ன் வீட்டிற்கு ஓடினேன். அங்கு எனக்கு ரத்தம் வழிந்ததால் மயக்கமாகிவிட்டேன். எனக்கு அவர்கள் தண்ணீர் கொடுத்து அவரது காரிலேயே கொரோனா காலமான அன்றைய தினம் நத்தம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்.

3. வழியில் பிரேம், வெண்ணிலா, ஸ்ரீதர், அண்ணாமலை ஆகியோர் வழிமறித்து இரும்பு பைப் கம்பியால் என் மாமா (அ.சா.1ன்) முன் பக்க கார் கண்ணாடியை அடித்து உடைத்துவிட்டார்கள். வெண்ணிலா என்பவர் பக்க கதவின் திறந்திருந்த கண்ணாடி பகுதி வழியாக என்னைப் பிடித்து வெளியே இழுத்தார். அப்போது வெளியே வாடா, நீ இங்கிருந்து எப்படி போவாய் என்று பார்க்கலாம் என்று மிரட்டினார். நாங்கள் அவரிடமிருந்து கார் கதவை சாத்திக் கொண்டோம். அப்போது என்னை சுரேஷ் என்பவர் இரும்பு பைப்பைக் கொண்டு அடிக்க வந்தபோது கார் கதவை நான் வேகமாக சாத்தியதால் அவர் கதவை உடைத்து நெளித்துவிட்டார். பின்னர் காரின் பின் பக்கம் பழநி, ராஜேந்திரன் மற்றும் சின்னத்தம்பி ஆகியோர் கல்லை எடுத்து எறிந்து பின் பக்க கண்ணாடியை சேதப்படுத்திவிட்டார்கள்.

4. அவர்களிடம் என் மாமா (அ.சா.1) காயம்பட்ட என்னை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதாகவும், எனவே வழி விடுமாறும் கேட்டதற்கு எதிரிகள் அனைவரும் என் மாமாவிடம் நீ அவனை கீழே இறக்கிவிடாவிட்டால் உன் மண்டையை உடைத்து , உன்னையும் போட்டுத் தள்ளிவிடுவோம் என்று மிரட்டினார்கள் . அப்போது வாய்க்கு வந்தவாறு அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார்கள். அப்போது என் மாமா, அ.சா1 அங்கிருந்து வேகமாக காரை எடுத்துக் கொண்டு நத்தம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தார் . அங்கு எதிரிகளின் உறவினரான சக்தி என்பவர் ஆட்டோ எடுத்துக் கொண்டு மருத்துவமனைக்கு வந்துவிட்டார் . அவருடன் எதிரிகளும் வந்தார்கள் . மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த என்னை பேரை சொல்லியும், கெட்ட வார்த்தைகள் சொல்லியும் வெளியே வாடா என்று மிரட்டி கூப்பிட்டார்கள்.

5. அப்போது மருத்துவமனையில் வேலை செய்தவர்கள் காவல் நிலையத்திற்கு தகவல் சொல்லி , போலீசார் இருவர் அங்கு வந்ததும், எதிரிகள் அங்கிருந்து சென்றுவிட்டார்கள். அப்போது என் மாமா, அ.சா.1 போலீசாருடன் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார் . நான் என் அப்பா , அம்மாவுடன் நத்தம் அரசு மருத்துவமனையில் தலையில் ஏற்பட்ட காயத்திற்கு தையல் போட்டுக் கொண்டு 4 நாட்கள் சிகிச்சை எடுத்துக் கொண்டேன் . எனது வலது பக்க காதில் ரத்தம் வழிந்து கொண்டே இருந்ததால் மேல் சிகிச்சைக்காக என்னை மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு எனக்கு ஸ்கேன் எடுக்கப்பட்டது . அதில் அடிபட்ட இடத்தில் காயமாக இருந்ததால் அதில் ரத்தம் வழிவதாகவும் , அந்த சமயம் கொரோனா காலம் என்பதால் வீட்டில் இருந்தவாறு சிகிச்சை எடுத்துக் கொள்ளும்படி என்னை அனுப்பி வைத்தார்கள். நான் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது போலீசார் என்னை விசாரித்தார்கள் . பின்னர் நான் சிகிச்சை முடிந்து வந்தபிறகு சம்பவ இடத்தில் இருந்த எனது இருசக்கர

வாகனத்தையும், மொபைல் போனையும் எதிரிகள் அடித்து நொறுக்கி எதிரி ஸ்ரீதரின் வீட்டு அருகே போட்டிருந்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

6. என் மீது இந்த நீதிமன்றத்தில் சி.சி.70/2023 என நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு நான் நத்தம் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் எனக்கு பதிலாக என் மாமா புகார் கொடுத்தார் . அ.சா.1 க்கு எந்த காயமும் இல்லை என்றால் சரிதான் . 07.05.2020 ம் தேதி இரவு 10.00 மணியளவில் வீட்டிலிருந்து தோட்டத்திற்கு சென்றதாக போலீசார் விசாரணையில் சொன்னோ என்றால் சொன்னேன் . 06.05.2020 ம் தேதி எதிரிகள் ஸ்ரீதர் , அண்ணாமலை ஆகியோர் மந்தையில் வைத்து அசிங்கமாக பேசியதை வீடியோ எடுத்ததாக நான் போலீசார் விசாரணையில் சொன்னோ என்றால் சொன்னேன் . நானும், அ.சா.1 ம் 24 மணி நேரமும் குடிபோதையில் இருப்பேன் என்றால் சரியல்ல, பிறந்த நாளன்று ஒரு வருடம் குடித்தேன்.

7. கொரோனா டைமாக இருப்பதால் வீட்டிலிருந்து மருத்துவம் பார்த்துக் கொள்ள சொன்னார்கள் என்ற விபரத்தை போலீசார் விசாரணையில் சொன்னோ என்றால் சொல்லவில்லை . சம்பவத்தின்போது நானும் , என் மாமாவும் மது போதையில் இருந்ததால்தான் என் மாமா சிகிச்சைக்கு சேரவில்லை என்றால் சரியல்ல . எதிரிகள் 07.05.2020 ம் தேதி என்னை கம்பி , கட்டை மற்றும் கல் ஆகியவற்றால் தாக்கவில்லை என்றால் சரியல்ல . நான் முதல் விசாரணையில் சொன்ன 3 சம்பவங்களும் எதிரிகளின் வீட்டின் அருகில்தான் நடந்தது என்றால் சரிதான் . சம்பவ இடத்தில் ரத்தம் வழிந்திருந்ததா என்றால் நான் பார்க்கவில்லை . ரத்தம் வழிந்த சட்டையை என்னிடமிருந்து போலீசார் கைப்பற்றினார்களா என்றால் இல்லை.

8. எங்கள் ஊரில் அடிக்கடி கிராம திருவிழா நடக்கும் என்றால் சரிதான் . பெண்களை குளிக்கும்போது போட்டே எடுப்பேன் என்றால் சரியல்ல . எனது செல்போனையும், வண்டியையும் உடைத்ததை போலீசார் பார்வையிட்டார்களா என்றால் போட்டோ எடுத்துக் கொண்டதாக என் அம்மா சொன்னார். அ.சா.1, என்னை நத்தம் மருத்துவமனையில் சேர்த்தார் என்றால் சரிதான் . கார் சேதமானதை போலீசார் போட்டோ எடுத்துக் கொண்டார்கள் என்றால் சரிதான் . குடிபோதையில், நானும், என் மாமாவும் பொலிரோ காரில் அதிவேகமாக சென்று எதிரிகளின் வீட்டின் அருகில் உள்ள பாலத்தில் மோதி விபத்தை ஏற்படுத்தியதால்தான் எங்களுக்கு காயம் என்றால் சரியல்ல . வாகனத்திற்கு ஏற்பட்ட சேதம் விபத்தினால் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

9. விபத்து ஏற்பட்ட விபரம் தெரிந்து விடும் என்பதால்தான் வாகனத்தை காவல் நிலையத்திற்கும் , மோட்டார் வாகன ஆய்விற்கும் உட்படுத்தவில்லை என்றால் சரியல்ல . மருத்துவரிடம் 8 நபர்கள் இரும்பு கம்பியால் அடித்ததாக சொன்னேனா என்றால் அடித்ததாக சொன்னேன் . என்னை கட்டையால் அடித்ததாகத்தான் சொன்னேன் , இரும்பு கம்பியால் அடித்ததாக சொல்லவில்லை . நாங்கள் மருத்துவமனைக்கு செல்வதற்கு முன்பாக நத்தம் போலீசார் அங்கு இருந்தார்கள் என்றால் இல்லை. அதே நாள் அதே நேரத்தில் சுரேஷ் என்பவர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்தார் என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது . அ.சா.1 கொடுத்த புகாரை யார் எழுதியது , எங்கு வைத்து எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் என் மாமா எழுதியதாக சொன்னார் . அந்த புகாரில் நானும் , என் தகப்பனார் குருசாமியும் சாட்சி கையெழுத்து போட்டோம் என்றால் ஞாபகமில்லை.

10. சம்பவ இடத்தில் எனக்கோ , அ.சா.1 க்கோ வீடு இல்லை என்றால் சரிதான் , அருகில் உள்ளது. வீட்டிலிருந்து தோப்பிற்கு செல்லும் வழியில் நடந்த சம்பவ இடத்திற்கும் கார் உடைக்கப்பட்டதாக சொல்லும் சம்பவ இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 50 மீட்டர் தூரம் இருக்கும்.

செல்போன், இருசக்கர வாகனம், கார் ஆகியவற்றின் உடைந்த பாகங்களை போலீசார் கைப்பற்றினார்களா என்றால் நான் மருத்துவமனையில் இருந்ததால் எனக்கு தெரியாது . எதிரிகள் காரையும், இருசக்கர வாகனத்தையும், செல்போனையும் சேதப்படுத்தியதாக மிகைப்படுத்தி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . காரின் சேதமதிப்பை புகாரிலும் , போலீசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல . போலீசார் உடைந்த காரை புகைப்படம் எடுத்தார்கள். காரை யாரும் சேதப்படுத்தவில்லை என்பதால்தான் அந்த புகைப்படத்தை போலீசார் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

11. நத்தம் அரசு மருத்துவமனை மற்றும் போலீசார் என் மாமா அ .சா.1 க்கு நன்கு பழக்கம் என்றால் சரியல்ல. அரசியல் பலத்தை பயன்படுத்தி சுரேஷ் என்பவருக்கு ஏற்பட்ட காயத்திற்கு ஆதரவாக சான்றிதழை அழித்துவிட்டோம் என்றால் சரியல்ல. பிரேம் கட்டையால் தலையில் அடித்து எனக்கு காயம் என்பது பொய் என்றால் சரியல்ல . சுரேஷ் என்பவர் கையால் தாக்கி காயம் என்பது பொய் என்றால் சரியல்ல எனக்கு வலது காதில் ஏற்பட்ட காயத்தை நத்தம் மருத்துவர் குறித்து கொண்டாரா என்றால் குறித்து கொண்டார் . இருசக்கர வாகனத்திலிருந்து கீழே விழுந்த நான் செல்போனையும், பைக்கையும் அங்கேயே போட்டுவிட்டு ஓடியதாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

12. காயம்பட்டவுடன் அ .சா.1 வீட்டிற்கு சென்ற விபரத்தையும் ரத்தம் வந்ததால் மயங்கிய விபரத்தையும் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன் . எதிரிகள் பிரேம் , வெண்ணிலா, அண்ணாமலை, ஸ்ரீதர் ஆகியோர் கார் கண்ணாடியை உடைக்கவில்லை என்றால் சரியல்ல. வெண்ணிலா என்னை திறந்திருந்த கார் கதவின் வழியாக வெளியே இழுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல . சுரேஷ் கார் கதவை அடித்து நெளித்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல . காரை ஆய்விற்கு உட்படுத்தினால் அறிக்கை

எங்களுக்கு எதிராக இருக்கும் என்பதால்தான் காரை ஆய்விற்கு உட்படுத்தவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் மருத்துவமனைக்கு வந்து அசிங்கமாக பேசி , மிரட்டியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எந்தவிதமான சம்பவமும் நடைபெறவில்லை, அவ்வாறு நடந்திருந்தால் மருத்துவமனை ஊழியர்கள் சாட்சியம் அளித்திருப்பார்கள் என்றால் சரியல்ல.

13. சம்பவ இடத்திலிருந்து மருத்துவமனைக்கு நத்தம் காவல் நிலையத்தை தாண்டிதான் வர வேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு வரும்போது புகார் கொடுக்க முயற்சிக்கவில்லை என்றால் காயம்பட்டிருந்ததால் புகார் கொடுக்க முயற்சிக்கவில்லை. நாங்கள் புகார் கொடுப்பதற்கு முன்பே சுரேஷ் நத்தம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து போலீசாரை மருத்துவமனைக்கு அழைத்து வந்தார் என்றால் சரியல்ல. நான் மது அருந்தியிருந்ததால் மதுரையில் எனக்கு சிகிச்சை அளித்த மருத்துவரை இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு வந்தேன் என்றால் ஞாபகமில்லை . சம்பவ இடத்தில் எனக்கு காயம்பட்டதால் ரத்தப் போக்கு ஏற்பட்டதால் மயங்கிவிட்டேன் என்றால் என் மாமா வீட்டில் எனக்கு தண்ணீர் கொடுத்ததால் நிதானத்திற்கு வந்துவிட்டேன்.

14. எதிரிகள் மருத்துவமனையில் அடிக்க வந்ததால் என் மாமா புகார் கொடுத்தார் என்றால் என் பெற்றோர் என்னுடன் இருந்தனர், நான் சிகிச்சையில் இருந்ததால் புகார் கொடுக்கவில்லை. என் மாமா அதனால் புகார் கொடுக்க சென்றார். எதிரிகள் அசிங்கமாக பேசி, பொது அமைதிக்கு குந்தகம் விளைவிக்கவில்லை என்றும், கொலை மிரட்டல் செய்யவில்லை என்றும் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சுரேஷ் கொடுத்த புகாரிலிருந்து தப்பிக்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

மேற்படி சாட்சியத்தை , சாட்சி சொல்ல -சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு , அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு , சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து , சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

M.Nallakannan., B.Com., B.L.,

Digitally signed by M.Nallakannan., B.Com., B.L.,
Date: 2024.10.01 17:39:14 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்